★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 25உ திங்கள் (7—5—56) ★ ★ வெளியூர்: சித்திரை 26உ செவ்வாய் (8—5—56) [இதழ்

இளந்தம்பதிகள் சாகச

அலுமினியப் படகில் பிரான்சிலிருந்து இந்தியா வந்

பாட்னா, மே 7

பிரான்சிலிருந்து இந்தியாவிற்கு விமானத்தில் அல்ல— வில்கூட அல்ல—200 பவுண்டு எடையுள்ள அலுமினியம் ப ஒன்றில் வருவது என்பது எளிதானதா?

பிரெஞ்சு நாட்டு, இளந்தம்பதிகள் இருவர், இந்த செயலைப் புரிந்திருக்கின்றனர்.

அலைகடலையும், ஆழமான நதிகளையும் இந்த அலுமி

(4-ம் பக்கம் பார்க்க)

நேருவின் அடக்குமுறை வேகம்!

பம்பாய் கோரி மராட்டியமெங்கும் கிளர்ச்சி

குழந்தைகளுடன் தாய்மார் ஆர்ப்பாட்டம்

தடையைமீறிய 245 பெண்கள் உட்பட 600 பேர் கைது

நாசிக், மே 6—

பண்டித நேருவின் அடக்குமுறை வெறி, பம்பாய் பிரச்சினையில், உச்சத்தை எட்டிக்கொண்டிருக்கிறது.

பம்பாய் நகரம் மராட்டியத்துடன் சேர்க்கப்பட வேண்டும் என்பதற்காக, மராட்டியர்கள் மேற்கொண்டுள்ள இடை விடாத கிளர்ச்சியை ஒடுக்கிவிட நினைத்து ஆயிரக் கணக்கானோரை சிறைக்குள் தள்ளி வருகின்றது சர்க்கார்.

அமைதியான மறியலில் ஈடுபடும் அறப்போர் வீரர்களை தடிகொண்டு தாக்குவதும், சிறைக்குள் தள்ளுவதும் தினம் தினம் நடைபெறும் நிகழ்ச்சிகளாகிவிட்டன.

தாய்மார்கள் போர்க்கொடி ஏந்தி தடை யுத்தரவுகளை மீறி கிளர்ச்சி செய்கின்றனர்.

மராட்டியத்தின் முக்கியமான நகரங்களில் எல்லாம்— பம்பாய், பூனா, நாசிக், அகமதாபாத், பெல்காம்—இங்கெல்லாம் மறியலும், ஆர்ப்பாட்டமும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இங்கு கிபாத் எனும் இடத்தில், கடந்த மே 4-ந் தேதியன்று சுமார் 600 தொண்டர்கள், கூட்டம், ஊர்வலம், ஆர்ப்பாட்டம் இவற்றிற்கு விதிக்கப்பட்ட தடையுத்தரவுகளை மீறி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

இந்த 600 பேரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்த 600 பேர் கொண்ட தொண்டர் படையின் தலைவர் ஒரு வீராங்கனை — கீதாபாய் வாக் என்பது அவர் பெயர்.

இந்த 600 பேரில் 245 பேர்கள் பெண்களாவர். இவர்களில் பலர் தங்கள் மழலைச் செல்வங்களை — குழந்தைகளையும் இடுப்பில்வைத்துக்கொண்டே ஒலி முழக்கமிட்டு, ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

'பம்பாய் நகர் மராட்டியருக்கு இல்லை' என்ற அநீதியான தீர்ப்பை, இதுபோன்ற மராட்டிய வீரர்களின் இடைவிடாதக் கிளர்ச்சி சிறிது சிறிதாகத் தகர்த்தெறிந்துவருகிறது. 'முடிவை மாற்றமாட்டோம்' என்று எதேச்சாதிகாரம் பேசிய பெரியவர்கள், 'யோசிப்போம்; மீண்டும் பரிசீலனை செய்வோம்' என்று கீழ் இறங்கி வந்துகொண்டிருக்கின்றனர்.

மராட்டியரின் கிளர்ச்சி நாளுக்கு நாள் வலுத்துக்கொண்டு வருகிறது. கிளர்ச்சியில் முன்னோடிகளாக விளங்குபவர்கள் தாய்மார்களாயிருக்கின்றனர் என்பது குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும்.

காட்கில் மகள்-சிறையில்

தாயைத் தொடர்ந்து மகளும் கைது

தடை உத்தரவை மீறி பெண்மணிகள் ஆர்ப்பாட்டம்!

பூனா, மே 7—

சம்யுக்த மராட்டியம் கோரி நடைபெறும் போராட்டங்களில், மராட்டிய வீராங்கனைகள் கொள்ளும் பங்கு குறித்து முன்பே செய்திகள் கிடைத்தன.

முன்பு என். வி. காட்கிலின் துணைவியார், இந்த கிளர்ச்சியை ஒட்டி பெண் தொண்டர்படை ஒன்றினைத் திரட்டி, தடை உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தியபோது கைது செய்யப்பட்ட தகவல் கிடைத்தது.

தாய்க்குப் பின், அவரைக் தொடர்ந்து இப்போது மகளும் இந்தப் போர்ப்படையில் அணிவகுத்திருப்பது குறித்து செய்தி கிடைத்திருக்கிறது.

சுதா காட்கில் என்ற அந்த வீராங்கனை, 12 பெண்கள் அடங்கிய குழு ஒன்றிற்குத் தலைமை ஏற்று, ஊர்வலம், பொதுக்கூட்டம் முதலியவற்றிற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையுத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார். அப்போது அவரும், இதரரும் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

இருண்ட கண்டத்தில் சுதந்திர ஒளி!

கோல்ட் கோஸ்ட் விடுதலை பெறுகிறது

நியூயார்க், மே 7—

பிரிட்டிஷாரின் காலனிகளுள் ஒன்றான, கோல்ட் கோஸ்ட், வரும் 1957-ம் ஆண்டில் சுதந்திரம் பெறும் என்று தெரியவருகிறது.

இந்த தகவலை கோல்ட் கோஸ்ட் நிதிமந்திரியான கிலோ அக்பெலி க்பெதேமா என்பார் இங்கு தெரிவித்திருக்கிறார்.

கோல்ட் கோஸ்ட் தேசீய இயக்கத் தலைவரான நிக்ருமா என்பார் கைதாகி சிறைவைக்கப்பட்ட காலத்தில், க்பெதாமாதான், சுதந்திர இயக்கத்தை நடத்தி வந்தார்.

தலைவர் சிறைக்குள் இருக்கும்போது, க்பெதேமாவின் அரசியல் விடுதலைக் கட்சி, நடைபெற்ற தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்று விட்டது என்றும் அதன் விளைவாக, இனி வெள்ளையர் ஆதிக்கம் கோல்ட் கோஸ்டில் தொடர்ந்து நீடிக்கமுடியாது என்றும் க்பெதேமா இங்கு தெரிவித்திருக்கிறார்.

தேர்தலுக்குப் பிறகு, கோல்ட் கோஸ்டிற்கு சுதந்திரம் தரவேண்டும் என்பதற்காக பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் இப்போது பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன என்றும், அவற்றின் விளைவாக 1957 மார்ச் 6-ந் தேதி, கோல்ட் கோஸ்ட் சுதந்திரப் பிரகடனம் செய்யும் என்றும், க்பெதேமா தெரிவித்திருக்கிறார்.

கோல்ட் கோஸ்ட் விடுதலை பெறுவது, ஆப்பிரிக்காவில் உள்ள இதர நீக்ரோ மக்களுக்கு மேலும் விடுதலை எழுச்சியைத் தரும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கோல்ட் கோஸ்ட் பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து விடுதலை பெற்ற பின்பும் பொருளாதார நிறைவு பெற்றதாகவே இருக்கும்; என்றாலும், நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக அன்னிய உதவி, முதலீடு இவற்றை வரவேற்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நிக்ருமா சீக்கிரமே விடுதலை பெறுவார் என்றும், விடுதலை பெற்றதும், நேருவின் அழைப்பிற்கிணங்க, ஒரு சுதந்திர நாட்டின் பிரதமர் என்ற முறையில், நிக்ருமா இந்தியாவிற்கு வருவார் என்றும் க்பெதேமா தெரிவித்திருக்கிறார்.

மறியலில் ஈடுபட்ட 10,000 பேர் விடுதலை

பீகார்-வங்க இணைப்பை எதிர்த்து மறியல் செய்ததையொட்டி கைது செய்யப்பட்ட 10,000 பேர்களையும் விடுதலை செய்யும்படி மேற்கு வங்க அரசியலார் உத்தரவிட்டுள்ளனராம்.

1955—56-ம் ஆண்டு இறுதி வரையில் சென்னை மாநிலத்தில் 3,250 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டிருக்கிறதாம்.

புதிய மாநிலங்கள்

புதிய சட்டசபை தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்

நாகபுரி, மே 7—

மாநிலங்களின் புது அமைப்புகள் உருவாக்கப்பட்டதும், அந்தந்த மாநில சட்டசபைகள், புதிய தலைவர், துணைத் தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று உள்நாட்டமைச்சர் பண்டித பந்த், மாநில முதல் மந்திரிகளுக்குத் தெரிவித்திருக்கிறாராம்.

இது குறித்த டெல்லியின் பழைய முடிவு, புதிய முடிவிற்குப் பின் பயனற்றதென்றும், புதிய முடிவிற்கொப்ப மாநிலப் புது அமைப்பு மசோதா திருத்தி அமைக்கப்படும் என்றும் அவர் கூறினாராம்.

'நியாயமான வரம்புக்குக் குறைந்துவிடுமாம்'

அரிசி விலை பற்றி அமைச்சர்

கல்கத்தா, மே 5—

"இன்னும் 15 நாட்களுக்குள்ளாவது, ஒரு திங்களுக்குள்ளாவது பல்வேறு மாநிலங்களின் அரிசி விலை நியாயமான வரம்புக்குக் குறைந்துவிடும்," என்று, இந்தியப் பேரரசின் துணை உணவு அமைச்சர் கிருஷ்ணப்பா கூறியுள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

13-5-56

மாநில மாநாட்டு விளம்பர நாள்

தி. மு. கழகத்தின் நகரக் கிளைகளும், சிற்றூர்—பேரூர்க் கிளைகளும் 13—5—56 ஞாயிற்றுக் கிழமையை மாநில மாநாட்டு விளம்பர நாளாகக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறோம்.

கழகத் தோழர்கள் ஆங்காங்கு, நடந்தோ அல்லது சைக்கிளிலோ அணிவகுத்துச் சென்று, தெருத் தெருவாகச் சுற்றி, ஒலி எழுப்புக் குழாய்கள் (Megaphone) மூலமும், ஒலி பெருக்கி வாயிலாகவும், திருச்சியில் மே 17, 18, 19, 20 ஆகிய நான்குநாட்களில் மாநில மாநாடு நடைபெறப்போவது பற்றியும், அதன் சிறப்பியல்புகள் குறித்தும், விளம்பர முழக்கம் செய்யும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அணிவகுத்துச் செல்லும்போது விளம்பரத் தட்டிகள் ஏந்திக் கொண்டு, இலட்சிய முழக்கமிட வேண்டும். ஆங்காங்கு குறிப்பிட்ட இடங்களில் நின்று மாநில மாநாடு பற்றிய விளம்பர முழக்கம் செய்யவேண்டும்.

எல்லா கிளைக் கழகச் செயலாளர்களும் மேற்கண்ட முறைகளில் முயற்சி எடுக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தி. மு. கழகத் தலைமை நிலையம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வங்காளி மொழிப் பகுதிகளை மீட்க!

மேற்கு வங்கத்தில் போராட்டம்

கல்கத்தா, மே 7—

பீகாரிலும், அசாமிலுமுள்ள வங்கப் பகுதிகளை மீட்க, மேற்கு வங்க மொழிவாரி மாநிலக் குழு இன்றுமுதல் அமைதியான முறையில் 'அறப்போர்' நடத்தப்போவதாக அறிவிக்கப்படுகிறது. சட்ட மறுப்புச் செய்ய மான்பூமிலிருந்து ஒரு குழு வந்திருக்கிறது.

'வேலை நிறுத்தத்திற்கு இனி இடமிருக்கக் கூடாதாம்'

'அடிப்படைக் காரணங்கள் மறைந்துவிட வேண்டுமாம்'

"தொழில் துறை உறவில் இனி வேலை நிறுத்தங்கள், கதவடைப்புக்கள் முதலியவைகளுக்கு இடமே இருக்கக்கூடாது—அதாவது, வேலை நிறுத்தங்களுக்கும், கதவடைப்புகளுக்கும் தேவையான அடிப்படைக் காரணங்கள் மறைந்துவிடவேண்டும் என்பது தான் அதன் அர்த்தம்; அப்படி ஏதாவது முரண்பாடு இருக்குமானால், அதை அமைதியான முறையில் தீர்த்து வைப்பதற்கு நியாயமான, பாரபட்சமற்ற ஒரு முறை இருக்கவேண்டும்."

இவ்வாறு, பிரதமர் நேரு, குர்காவில் நடைபெறும் இந்திய தேசீய தொழிற் சங்கக் காங்கிரஸ் 8-வது ஆண்டு கூட்டத்திற்கு அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நம் நாடு
...ன்னை 7—5—'56 திங்கள்

[மு]தல் தமிழர் துரோகி'!

[த]ட்சிணப் பிரதேச அமைப்[பு]க் கோரிக்கையை ஏற்காதவர்கள்—எதிர்ப்பவர்கள்—இரண்டிலும் சேராது வாய் மூடி இருப்பவர்கள் — ஆக மூன்று தரத்தினரையும், தமிழர்களின் துரோகிகள் என நிதி[அ]மைச்சர் சுப்பிரமணியம், நாக்கில் நரம்பின்றித் தூற்றித் திரிகிறார். அவருக்குத் துணையாக முன்னாள் இராமநாதபுரம் ராஜாவும் இன்னாள் மராமத்து மந்திரியாகவும் இருந்துவரும் சேதுபதியும் வசைபாடக் கிளம்பிவிட்டார்.

"யார் என்ன சொன்ன போதிலும் தட்சிணப் பிரதேசம்தான் தமிழகத்தின் வறுமையைப் போக்கி விமோசனமளிக்கும் வரப்பிரசாதம் என்பதை எவரது முன்னிலையிலும், எந்த மேடையிலும் நின்று நான் கூறத் தயார்" என்று நிதி அமைச்சர் கொக்கரித்துவருகிறார். அதாவது, 'தமிழ்நாட்டின் வறுமையைப் போக்கி விமோசனமளிக்கும் வரப்பிரசாதம்' தட்சிணப் பிரதேச அமைப்பு என்பது நிதி அமைச்சரின் நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கை அவருக்கு உண்மையிலேயே இருக்குமானால், இந்தியப் பேரரசின் தொடர்பு தமிழ்நாட்டிற்கு அறவே வேண்டியதில்லை என்ற ஒரு கோட்பாடும், அவரது நம்பிக்கையில் ஊடுருவி ஒட்டிக்கொண்டு இருப்பதை அவர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தட்சிணப் பிரதேசம் ஏற்பட்டு விடுவதினாலேயே தமிழ்நாட்டின் வறுமை முழுதும் ஒழிந்துவிடக்கூடும் என அவர் உறுதியாகக் கூறுவதை, நாமும் வாதத்திற்காகவே உண்மையென ஒப்புக்கொள்ளுவோம். ஆனால், அவர் கூற்றிலிருந்து நமக்கு ஏற்படும் ஐயத்திற்கும் தக்க சமாதானம் கூறவேண்டிய பொறுப்பும், தமக்கு இருக்கிறது என்பதை அவர் மறந்துவிடக்கூடாது.

அதாவது, தட்சணப் பிரதேச அமைப்புடன் தமிழ்நாட்டின் வறுமை தொலைந்து வளம் கூடிவிடும் என்பது உண்மையானால், இந்தியப் பேரரசுடன் ஒரு உறுப்பாக இணைந்திருப்பதும், அது ஆட்டியபடி எல்லாம் ஆடிக் கிடப்பதும் தமிழ்நாட்டிற்கு அவசியமில்லை என்பதும் சொல்லாமலே விளங்கும். அதுவுமன்றி, எஜமான் நிலையில், இந்தியப் பேரரசும், எடுபிடிதன்மையில் தமிழ்நாடும் இருந்துவர வேண்டியதும் வேண்டப்படாதது —பொருத்தமற்றது என்பதையும் ஒப்புக்கொண்டாக வேண்டும்.

தட்சிணப் பிரதேசம் தேவை என்பதற்காக நிதி அமைச்சர் கூறும் வாதத்தில், நாம் மேலெடுத்துக் காட்டிய உண்மை மறைந்திருக்கிறது. ஆனால், அந்த உண்மையை நிதி அமைச்சர் ஒருக்காலும் ஒப்புக்கொள்ள முன்வரமாட்டார்.

அவர் முன்வராததுடன் மட்டுமின்றி, தமிழ் நாட்டின் வறுமை ஒழிப்புக்கு தட்சிணப் பிரதேசம் ஒரு வரப்பிரசாதம் என வாதிடுவது போன்றே, தட்சிணப் பிரதேசத்தின் பாதுகாப்புக்கு இந்தியப் பேரசின் அரவணைப்பு இன்றியமையாதது என்ற வாதத்தை அப்பொழுது கூற அவர் முன்வருவார். நீதியை நிலைநாட்ட வேண்டுமென்றே, நியாயத்தை தேடிக் கண்டறிய வேண்டுமென்றே இலட்சியப் பற்றுதல் துளியுமின்றி, வாங்கும் பணத்திற்கேற்ப வழக்காடுவதுதான் வழக்கறிஞரின் தொழிலறம் எனக்கொண்டு, வழக்கறிஞராக வளர்ந்துவிட்ட நிதி அமைச்சரிடம், இத்தகைய அரசியல் சந்தர்ப்பவாதங்களைத்தானே எவரும் எதிர்பார்க்க முடியும். நிற்க,

'தட்சிணப் பிரதேசம் வேண்டாம் என்கிறவர்கள் தமிழர்களின் துரோகிகள்' எனவும் நிதி அமைச்சர் வசைபாடுகிறார். இப்படி வசைபாடுவதின் மூலம், தமிழர்களுக்குத் தாம் செய்த இமாலய துரோகத்தை மறைத்துவிடக்கூடும் என நிதி அமைச்சர் நம்புகிறார்போலும்.

தட்சணப் பிரதேசம் அமைவதின் மூலம்தான் தமிழ் நாடு செழிப்படையும் என்பதில் நிதி அமைச்சருக்கு உண்மையிலேயே உறுதியான நம்பிக்கை இருக்குமானால், தி. கொ. பகுதியில் உள்ள தேவிகுளம்—பீர்மேடுபோன்ற தமிழ்ப்பகுதிகளை சென்னையுடன் இணைக்கவேண்டும் என்ற கோரிக்கையை முதற் கூட்டத்திலேயே கிளப்பாது இருந்திருக்க வேண்டும்.

அப்பிரச்சினையை கிளப்பக்கூடாது; கிளப்புவதானால் அமைச்சரவையில் தாம் இருக்க முடியாது என எச்சரித்து, தனது காங்கிரஸ் அமைச்சரவையை தன் கருத்துக்குத் திருப்பி இருக்க வேண்டும். ஆனால், நிதி அமைச்சரோ அதைச் செய்யவில்லை,

தமிழ் மக்களின் தனிவாரிசு எனத் தம்மை பிறர் கூறத்தகும் வகையில், தேவிகுளம்—பீர்மேடு விவகாரத்தில் நிதி அமைச்சர் நடந்துகொண்டு இருக்கிறார். அத்துடனும், அவர் நிற்கவில்லை. தேவிகுளம்—பீர்மேடு தமிழர்களுக்குக் கிடையாது என இந்தியப் பேரரசு மசோதா மூலம் இறுதியாகக் கூறிவிட்ட பிறகும்கூட, தாம் கோரிய தி—கொ. தமிழ்ப் பகுதிகள் சென்னைக்குக் கிடைக்காததற்காகத் தாம வருந்துவதாகவும சட்டசபையில் நிதி அமைச்சர், நீலிக்கண்ணீர் வடித்திருக்கிறார்.

தேவிகுளம் — பீர்மேட்டை சென்னைக்காகக் கோரினதைக் கொண்டு நிதி அமைச்சரின் நடத்தையை நோக்குமிடத்து, அதுவும் தட்சிணப் பிரதேசத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒரு செயலேயாகும் என்பது தெளிவாகும். இதை, தட்சிணம் பிரதேச அமைப்புக்கு எதிராக, நிதி மந்திரி கையாண்ட மறைமுக சதி என்றே கூறவேண்டும். எனவே தட்சிணப் பிரதேசம் வேண்டாம் என்பவர்கள் நிதி அமைச்சர் சொல்படி, தமிழர்களின் துரோகியாவார்களானால், நிதி அமைச்சரும் அதற்கு விலக்கல்ல. 'முதல் தமிழர் துரோகி' என்ற பட்டத்தைச் சுமப்பதற்கு முழுத்தகுதியும் பெற்றிருப்பவர் நிதி அமைச்சரே யாவார்.

பிறர்மீது வீசும் வசைக்குத் தாமே முதல் பலியாவதை அறியாது நிதி அமைச்சர் உளறி வழிகிறார். அரசியலில் இலட்சிய அடிப்படை இல்லாது, பதவி ஒன்றை மட்டுமே வாழ்க்கை இலக்காகக் கொண்டு, அதிகார அரசியலில் நிதி அமைச்சர் போன்று அலைந்து திரியும் அலகைகளை, தமிழ்ப் பெருங்குடி மக்கள் புரிந்துகொள்ளாமல் இல்லை. 'முதல் தமிழர் துரோகி' என்ற பட்டத்திற்குரிய நிதி அமைச்சருக்கு அடுத்தத் தேர்தலில் தமிழ் மக்கள் பரிசு வழங்கத் தவறமாட்டார்கள்.

சந்தேகமிருந்தால்....!

ஆமதாபாத், மே 3—

"அம்பர் சர்க்காவின் ஆற்றல் குறித்து ஏதாவது சந்தேகமிருந்தால் அதைக் கைவிட்டுவிட வேண்டும்,"

என்று, இங்குள்ள ஆசிரமம் ஒன்றில், அம்பர் சர்க்கா பயிற்சி வகுப்பைத் துவக்கிவைத்துப் பேசுகையில் இந்தியப் பேரரசின் தொழிலாளர் அமைச்சர் கந்துபாய் தேசாய் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவில் மாங்கனிஸ் கனி 1954-ல் 14,13,068 டன்னும், 1955-ல் 15,20,316 டன்னும் உற்பத்தியாயிற்று.

'அமைச்சர்கள் இருக்கும்போது சிரிப்புக்கு ஒருஇயக்கம் அவசியமா?'

'மின்சாரத்திற்கு 'வெட்டு' இருப்பதுபோல் மந்திரிகள் பேச்சுக்கும் 'வெட்டு' அவசியம்'

"மந்திரிகள் இருக்கும் போது சிரிப்புக்கு ஒரு இயக்கம் அவசியமா என்பதுதான் தெரியவில்லை. சில மந்திரிகளின் பேச்சைக் கேட்டால் சிரிக்க வேண்டியுள்ளது; இன்னும் சில மந்திரிகளின் பேச்சைக் கேட்டால் அழவேண்டியிருக்கிறது; மேலும் சிலரின் பேச்சைக் கேட்டு அழுவதா சிரிப்பதா என்பதுதான் புரியவில்லை.

"மராமத்து இலாகா மந்திரி சேதுபதியின் பேச்சைப் பாருங்கள்! உள்ள கோளாறுகளுக்கெல்லாம் மராமத்து செய்ய வேண்டியது இவர் வேலை; ஆனால், இவரது பேச்சில் உள்ள கோளாறுகளுக்கு யார் மராமத்து செய்வது என்பதுதான் புரியவில்லை.

"மதுரை — இராமநாதபுரம் வர்த்தக சங்கத்தினர், தெற்கில் பெரிய அளவில், ஒரு 'தெர்மல் ஸ்டேஷன்' அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தினர்கள். இத்தகைய ஒரு 'தெர்மல் ஸ்டேஷன்' அமைந்தால், வருடா வருடம் வரும் மின்சார வெட்டை பெருமளவில் சமாளிக்க முடியும்.

"இதற்கு மந்திரி கூறிய பதில் என்ன?

"தெற்கிலே நிலக்கரி கிடையாது; வங்கம், பீகாரிலிருந்து வரவழைப்பதினால் விலையும் அதிகமாகும்; முடியாத காரியம்கூட!

"மந்திரியின் வாதத்தை எடுத்துக் கொண்டால் நிலக்கரி உள்ள இடத்தில்தான் 'தெர்மல் ஸ்டேஷன்' அமைய முடியும்; மற்ற இடங்களில் முடியாது என்று அர்த்தமா?

'நிலக்கரிக்கு அகில இந்தியாவிலும் ஒரே விலையை நிர்ணயம் செய்திருப்பது மந்திரிக்குத் தெரியுமா? போக்குவரத்தில் சிறிது விலை கூடினாலும் அதனால் பெரிய கஷ்டம் ஏற்பட்டு விடாது.

"தனிப்பட்ட முறையில் தொழிற்சாலைகளை நடத்துபவர்கள், 'ஜெனரேட்டிங்' அமைப்பு வைத்து, ஓரளவு மின்சாரத்தை உற்பத்தி செய்கிறார்கள். இதே ரீதியில் பார்க்கப் போனால், ஒரு 'யூனிட்' மின்சாரத்தின் விலை நான்கு அணா ஆகிறது. பைகாரா மின்சாரம் ஒரு 'யூனிட்' முக்கால் அணாவாகிறது. நிலக்கரிக்கு, போக்குவரத்தின் காரணமாக சிறிது அதிக விலை கொடுத்தாலும், அதன் மூலம் பெரிய 'தெர்மல் ஸ்டேஷன்' அமைந்தால், ஒரு 'யூனிட்' மின்சாரம் இரண்டு அணாவுக்குக் கிடைக்கும். இதை யாராவது வேண்டாமென்பார்களா? 'யூனிட்' நான்கு அணாவுக்குக் கிடைக்கும் மின்சாரம், தொழில்களுக்கு இரண்டு அணாவுக்கும் குறைவாகக் கிடைத்தால் அதை வரவேற்பார்கள்.

"ஆமதாபாத்திலும், பம்பாயிலும 'தெர்மல் ஸ்டேஷன்' மூலம் மின்சாரத்தை எடுத்துத் தொழில்களை நடத்துகிறார்கள்; இவர்களுக்கு மட்டும் எப்படி நிலக்கரி கிடைக்கிறது? சென்னையில்கூட இதே முறையில்தான் மின்சாரத்தை உற்பத்தி செய்து தொழில்களை நடத்துகிறார்கள்.

"தெற்கிலே மேலும் ஒரு 'தெர்மல் ஸ்டேஷன்' அமைய வேண்டுமென்று சொன்னால் மட்டும் 'நிலக்கரி விலை அதிகம்; கிடைப்பது கஷ்டம்........' என்று, மந்திரியின் வாக்குவாதம் கிளம்பிவிடுகிறது.

"இங்கு பெரிய அளவில், மேலும் ஒரு 'தெர்மல் ஸ்டேஷன்' ஏற்பட்டால், எதிர்காலத்திலும் அது சிறந்து விளங்கும். நெய்வேலியிலிருந்து நிலக்கரி எடுக்க ஆரம்பிக்கும் போது, நாம் வங்கத்திற்கும் பீகாருக்கும் ஓடவேண்டிய அவசியமும் இருக்காது; ஆகவே, போட்ட 'முதலு'க்கும் பழுதில்லை. 'மின்சார வெட்டு ஏற்படும்போது, பெரும் அளவு அது உதவியாகவும் இருக்கும்.

"'மின்சாரத்திற்கு 'வெட்டு' இருப்பதைப்போல், மந்திரிகளின் பேச்சுக்கும், குறைந்த பட்சம் எழுபது சதவிகிதம் 'வெட்டு' அவசியம் சார்........' என்று, என் ஆபீஸ் பையன் வேறு, அவனது விமர்சனத்தில் இயங்குகிறான்."

—4-5-56 'நவ இந்தியா' இதழில் 'ஊர் வம்பு' என்ற பகுதியில், 'யூ. ஆர்.' என்பார் இவ்வாறு எழுதியுள்ளார்.

செங்கோட்டையின் வளமிகுந்த பகுதியை இழப்பதற்குக் காரணம்?

'சென்னை சர்க்காரின் கண்மூடித்தனமே'

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் எல். எஸ். கரையாளர் குற்றச்சாட்டு

"பெரும்பாலான மலைப்பகுதிகள் கேரளத்துடன் இணைய வேண்டியிருப்பதால், தற்போது செங்கோட்டை தாலுகாவின் மலைப் பகுதிகளிலிருந்து திரு–கொச்சி சர்க்காருக்குக் கிடைத்துவரும் சுமார் ரூ 10 இலட்சத்தில், ரூ $9\frac{1}{4}$ இலட்சம் கேரளத்திற்குக் கிடைக்கும்; மீதி ரூ. 75,000 மாத்திரமே சென்னை மாநிலத்திற்குக் கிடைக்கப்போகிறது. இவ்வளவு வளமிகுந்த பகுதியை இழப்பதற்குக் காரணம், சென்னை சர்க்காரின் கண்மூடித்தனம்தான்.

"இரு மாநில முதன் மந்திரிகளும் கூடிப்பேசி, செங்கோட்டைத் தாலுகா மக்களின் பொருளாதார வசதியை நாசமாக்க, இவ்விஷயத்தில் சென்னை முதன் மந்திரி இணங்கியது பெரும் துரோகமேயாகும். இப்பொழுதும் ஒன்றும் கெட்டுவிட்டதாகக்கூறமுடியாது; மக்கள் சபையில் இது சம்மந்தமாக இறுதிமுடிவை இன்னும்மேற்கொள்ளவில்லை. எனவே டில்லிக்கு ஒரு தூதுக் குழு உடனடியாகச் சென்று நிலைமையை விளக்கினால் நன்மை கிடைக்கக்கூடும்."

இவ்வாறு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் திரு எல். எஸ். கரையாளர் அவர்கள், செங்கோட்டைத் தாலுகா பிளவு படுத்தப்பட்டதால் அதன் எதிர்காலம் எவ்வளவு பாதிக்கப்படுமென்பது பற்றி பத்திரிகையாளரிடம் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர், அ. இ. காங்கிரஸ் தலைவர் யூ. என். தேபரைச் சந்தித்து, செங்கோட்டைத் தாலுகா துண்டிக்கப்பட்டதால் ஏற்பட்ட நஷ்டங்களையும், தேவிகுளம்—பீர்மேடு தாலுகாக்கள் சென்னையுடன் இணையவேண்டியதின் அவசியத்தையும் எடுத்துரைத்ததாகக் கூறியுள்ளார்.

★

'எல்லைகளை மீண்டும் சரிபார்க்க வேண்டும்'

சென்னை மாநிலப் பிரதிநிதிகளிடம் கே. சட்டநாதன் வற்புறுத்தல்

செங்கோட்டை—

சென்னை சர்க்காரின் செங்கோட்டை 'சர்வே' குழுவிலுள்ள பிரதான அதிகாரிகளான நெல்லை, கொல்லம் மாவட்டக் கலெக்டர்களை சந்தித்து, அவர்களிடம் செங்கோட்டைத் தாலுகாவின் தற்போதைய நிலைமையையும், சென்னையுடன் இணையும்போது ஏற்படும் மாறுதல்களையும் பற்றி விரிவாக விவாதித்ததாக கே. சட்டநாதன் கூறியுள்ளார்.

செங்கோட்டைத் தாலுகாவில், ஏற்கனவே நடைபெற்ற 'சர்வே' சரிதானா என்பதைப் பார்வையிடுவதுடன், தவறாக இருக்குமானால் சென்னை சர்க்காருக்கு விவரம் தெரியப்படுத்த வேண்டுமேயல்லாது, வேறொன்றும் செய்ய முடியாத நிலைமையில், வருகை தந்துள்ள சென்னை மாநிலப் பிரதிநிதிகளில் பிரதான அதிகாரியான நெல்லை மாவட்டக் கலெக்டர் ஆற்றொழுக்கை அனுசரித்து, மலை உச்சியிலிருந்து மேற்குமுகமாகத் திரும்பும் பகுதிகளைக் கேரளத்திற்கும், கிழக்குமுகமாகத் திரும்பும் பகுதிகளை சென்னைக்குமாக அமைக்கப்பட்டிருக்கும் எல்லைக் கோடுகளில் சந்தேகத்திற்குரிய சில

(4-ம் பக்கம் பார்க்க)

புத்தரே சிறந்த பகுத்தறிவுவாதி

டாக்டர் ராதாகிருஷ்ணன் கருத்து

புத்தர் பகுத்தறிவுவாதி என்றும், வெறும் கொள்கைவாதி அல்லவென்றும், டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் டில்லி வானொலி நிலையம் மூலம் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னார்:—

"உலகத்தில் பகுத்தறிவுவாதி என்று யாரையாவது கூறலாமென்றால், அது புத்தர்தான்; அவர் 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்பதையே வற்புறுத்தினார்.

"அறிவுக் கண்கொண்டு உலகத்தைப் பார்த்தால் ஒன்றுமே நித்தியமாயில்லையே என்று தோன்றும்: பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு ஆகியவை சங்கிலித் தொடர் போல்வருவது தெரியும். 'இதுதான் வாழ்வா? வேறு நீடித்த, நிரந்தர உண்மை எதுவுமே இல்லையா?' என்ற கேள்வி எழும்.

"புத்தர் வெறும் சித்தாந்தி அல்ல; தம் கொள்கையை விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருந்தவருமல்ல; அவர், தாம் கண்டவற்றை மற்றவர்களும் கண்டு உண்மை தெரியும்படி கூறினார். ஒவ்வொரு நிகழ்ச்சியின் காரண காரியத் தொடர்புகளை உணர்ந்து கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்.

"ஒவ்வொருவரும் சுய அனுபவத்தின் மூலம் மெய் உணர்வை உணரவேண்டும்—என்றுதான் புத்தர் போதித்தார். தாம் அறிந்த எல்லாவற்றையும் அவர் ஒளிக்காமல் கூறினார். ஆனால், தாம் கூறியவற்றை யாரும் அப்படியே நம்பி நடக்கவேண்டாம் என்றும், ஒவ்வொருவரும் சுய அனுபவத்தைக் கொண்டு உண்மையை அறிய வேண்டுமென்றும் அவர் கூறினார்.

"எனவே, ஒவ்வொருவரும் ஒழுக்க நெறியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று புத்தர் மக்களுக்குக் கூறினார். 'நிர்வாண' நிலை என்ன என்பதை அவர் விளக்கவில்லை; தாம் அதை விளக்கி மற்றவர்கள் அதை அப்படியே பிரமாணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதுதான் அவர் கருத்து.

'அவர் நடுவழியையே வற்புறுத்தினார்; சுய அனுபவம், பகுத்தறிவு ஆராய்ச்சி, ஒழுக்க நெறி ஆகியவைகளையே அவர் வற்புறுத்தினார்.

"புத்தர் போதனைகளை யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. ஆனால், எல்லா மதங்களையும் போல் பௌத்த மதமும் பிறகு தர்க்க வாதத்திலும், வரட்டு வேதாந்தத்திலும், துவேஷம், மனஸ்தாபம் முதலியவைகளிலும் அமிழ்ந்து விட்டது."

இரண்டாவது திட்ட காலத்தில் எண்ணெய் ஆதாரங்களைக் கண்டு பிடிக்கும் வேலைகளுக்காக, இயற்கை வள—விஞ்ஞான ஆராய்ச்சி மந்திரி காரியாலயம் ரூ 30 கோடி ஒதுக்கி வைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏஜெண்டு தோழர்களுக்கு அறிவிப்பு

தபால் மூலமாக அனுப்பப்படும் இதழ் கட்டுகளின்மேல் உறைகளில் 'To be delivered at window' என எழுதப்பட்டு அனுப்பப்படுவதால், தபால் மூலமாக இதழ்களைப் பெறும் ஏஜெண்டுத்தோழர்கள் அந்தந்த ஊர் தபால் நிலையத்திலேயே சென்று, அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கும் 'அடையாள அஞ்சல் அட்டை'யைக் காட்டி, இதழ் கட்டுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

—பொறுப்பாளர்

செய்திச் சுருள்

சௌந்திரபாண்டியனார் துவக்கப் பள்ளி கட்டிடம்

நிதிக் குழுக் கூட்டம்

நிலக்கோட்டை, ஏப். 29—மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டம் குறும்பப்பட்டியில் மறைந்த மாவீரர் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனார் பெயரால் கட்டப்பட்டு வருகிற கட்டிடத்தின் நிதிக்குழுக் கூட்டம் 22-4-56 மாலை 3-30 மணியளவில் தலைவர் திரு. இ. எம். பி. பி. மாசாண (நாடார்) இல்லத்தில் நடைபெற்றபோது மதுரை நகர சபை உறுப்பினர் எஸ். முத்து, மதுரை பாண்டியன் 'ஸ்காலர்ஷிப்' குழுத் தலைவர் திரு எம். எஸ். ராமசாமி, திரு பி. பொன்ராமன் ஆகியோர் பள்ளிக் கட்டிடம் கட்டி முடிப்பதற்கு தங்களுடைய பூரண உதவியையும், ஒத்துழைப்பையும் கொடுப்பதாக வாக்களித்திருப்பதற்கு பாராட்டுத் தெரிவித்தும், அவர்களை இக்குழுவிற்கு ஆலோசகர்களாக இருக்கும்படி கேட்டுக்கொண்டும், நிதிக்கு இதுவரை ரூ 1,067 வரை நன்கொடை தந்து உதவியவர்களைப் பாராட்டியும், இன்னும் ரூ. 3,000 தேவைப்படுவதால் அனைவரும் உதவிசெய்ய வேண்டுமெனக் கோரியும் ரூ 10-க்கு மேல் நிதி அளிப்பவர்களின் பெயர்களை மேற்படி கட்டிடத்தின் போர்டில் பதிவு செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பல்வகைத் தொழில் நுட்ப பாடத் திட்டம்

செய்யார், ஏப். 26—சேயாறு போர்டு உயர்நிலைப் பள்ளியில், அண்மையில் பல்வகைத் தொழில் நுட்பத் திட்டத்தின்கீழ் பொறியியல், விவசாயம் ஆகிய இரண்டு தொழில்களும் புகுத்தப் பெற்றன. இவ்வாண்டு காலம் தாழ்த்தி அவை இடம் பெற்றபோதிலும் முழுத்திறனுடன் அவற்றில் மாணவர் பணியாற்றி வருகின்றனர். இத்திட்டம் வெற்றிபெறச் செய்த ஊர்ப் பொது மக்களின் ஒத்துழைப்பு மிகுந்த ஊக்கமும் தூண்டுதலும் தருவதாகும். ஏற்கனவே இவ்வூர்ப் பெரியார் திரு. மா. துரைசாமி (முதலியார்) அவர்களும், அவர் குடும்பத்தினரும் தாராள மான உள்ளத்துடன் விவசாயப் பயிற்சிக்காக 143 ஏக்கர் நிலத்தை நன்கொடையாக வழங்கியுள்ளனர். பொது மக்களின் ஒத்துழைப்பு நிறைந்த விரிந்த அளவில் விரைவில் கிடைக்குமென ஆர்வமுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

திருப்பத்தூர் விவசாய ரயத்துகள் மாநாடு

திருப்பத்தூர் (வ ஆ) மே. 2—திருப்பத்தூர் நகரில், சர்க்கார் காரியாலயத்தில். வ. ஆ. மாவட்டா கலெக்டர் திரு என் கிருஷ்ணசாமி தலைமையில், திருப்பத்தூர் தாலுகா விவசாய ரயத்துகள் மாநாடு நடைபெற்றது. தோழர்கள் வி எஸ். விசுவநாதம், வி. என். தத்தப்பன் ஆகியோர் பேசினர்.

அபிவிருத்திக் கூட்டம்

4—5—56ல், வாணியம்பாடி காந்தி நகரில், திருப்பத்தூர் நிலவரி வட்டார அதிகாரி தலைமையில் வாணியம்பாடி பிர்க்கா அபிவிருத்திக் கூட்டம் ஒன்று நடைபெற்றபோது, தோழர்கள் டி. கரிய கவுண்டர், வி. என். தத்தப்பன், வி. கே. கந்தசாமி ஆகியோர் பேசினர்.

மதுரை இளங்கோ மன்றம்

28—4—56 இரவு 10 மணியளவில் மன்றக் கட்டிடத்தில், தோழர் மு. சந்தானம் தலைமையில், மன்ற உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, 4-2-56 முதல் 28-4-56 முடிய வரவு-செலவுக் கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப் பட்டது.

வடசென்னை குறள்நெறிக் கழகம்

28-4-56 இரவு 7-மணியளவில், மேற்படி கழக 1956-ம் ஆண்டுச் செயற்குழுவினர் தேர்தல் புலவர் கி. தியாகராசனார் தலைமையில் கழகக் கட்டிடத்தில் நடைபெற்றபோது, தோழர்கள் ஆனந்தன் செயலாளராகவும், ம. முகம்மது அலி துணைச் செயலாளராகவும், அ நல்லதம்பி பொருளாளராகவும், மற்றும் ஐவர் செயற் குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆம்பூர் (வ. ஆ. மா.) திருவள்ளுவர் கழகம்

22—4—56 காலை 10 மணியளவில், மேற்படி கழக நிலையத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், 6—5—56ல் புத்தர் விழா நடத்த ஏற்பாடு செய்வதெனவும், மாவட்ட திருவள்ளுவர் கழக நிதிக்கு ஆம்பூரில் நாடகம் நடத்தும் முயற்சிக்கு ஆதரவளிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. மற்றும் இக்கழகத்திற்கு மறைமலை அடிகள் திருக்குறள் வகுப்பு, ச சோ. பாரதியார் சொற்பயிற்சி மன்றம், திரு. வி க. ஓவியக் குழு, சுந்தரனார் நாடக மன்றம் ஆகிய உட்பிரிவுகள் நிறுவப்பட்டு, கழக நிலையத்திற்கு 'புத்தர்'—பெயரிடப் பட்டது. பின்னர் 'சேரன்-செங்குட்டுவன்' நாடகம் நடத்திய கழக உறுப்பினர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

தாய்மார் கழகப் பொதுக்கூட்டம்

சென்னை - பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழக மாதப் பொதுக்கூட்டம் மயிலை சிவமுத்து தலைமையில் 29—4—56 மாலை 3-15 மணியளவில், சென்னை 19 சந்திரப்ப முதலி தெருவில் நடைபெற்றது. திருமதிகள் கமலவதனம் ஜெயலட்சுமி, சண்பகம் அம்மையார் ஆகியோர் பேசினர். புலவர் கூர்மாவதாரக்கோன் 'நாட்டுப் பாடல்களும் அவற்றின் நற்பயனும்' என்ற தலைப்பில் நகைச்சுவை ததும்ப சொற்பொழிவாற்றினார். வீணை வாசிப்பில் தேர்வுற்ற சண்பகம் அம்மையாரைப் பாராட்டித் தாமரைக்கண்ணி அம்மையார் பரிசில் நல்கினர்.

பகுத்தறிவு மாநாடு வரவேற்புக் குழுக் கூட்டம்

26—4—56 இரவு 7 மணியளவில், தோழர் மா. இரா. குறள்தாசன் தலைமையில், பம்பாய்—தாராவி சௌந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றச் சார்பில் நடைபெறவிருக்கும் 'முதல் பகுத்தறிவு மாநாடு' வரவேற்புக் குழுக்கூட்டம் நடைபெற்றபோது, வரவேற்புக் குழுக் கட்டணம் ரூ 30 என்று முடிவு செய்யப்பட்டது. மாநாட்டில் 'எரிமலை' என்ற நாடகம் நடிப்பதென்றும், 'பாண்டியன்' கையெழுத்தேட்டை பகுத்தறிவு மாநாடு நினைவு மலராக அச்சிட்டு வெளியிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

வாணியம்பாடி தபால் ஊழியர் சங்கம்

அகில இந்திய நான்காம் பிரிவு தபால் ஊழியர் சங்கம்—சென்னை வட்டம்—வாணியம்பாடிக் கிளைச் சங்கத்தின் சார்பில், திருப்பத்தூர் தலைமை அஞ்சலகக் கட்டிடத்தில், 29—4—56 அன்று திரு கெ. சீதாராமன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள் சாமி (அய்யர்), சாமிநாதன், முகுந்த மாதவ ராஜு, ஜெயராமன், கே. சண்முகம், வி இராமகிருஷ்ணன் ஆகியோர் கடமை—கட்டுப்பாடு பற்றிப் பேசிய பின், ஜூன் 10-ந் தேதி சங்கத்தின் ஆறும் ஆண்டு விழாவை திருப்பத்தூரில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

கழகச் செய்திகள்

கட்டிமேடு தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

29—4—56 மாலை 6 மணியளவில், கட்டிமேடு கடைவீதியில் ப. வீராசாமி தலைமையில், பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் வி. ஆர். எம். சுல்தான் கழகக் கொள்கைகளை விளக்கி சிறிது நேரம் பேசினார்; பின்னர், தோழியர் சத்தியவாணிமுத்து கழகம் மேற்கொண்ட இலட்சியங்கள் குறித்து விளக்கவுரையாற்றினார்.

குறிப்பு:—கட்டிமேட்டில் நடைபெற்ற இக்கழகக் கூட்டத்தை எப்படியும் நடக்கவொட்டாது கினைத்து 144-தடை உத்தரவு போடும்படி போலீசாரிடம் புகார் செய்தும், கடைசி விநாடிவரை பல இன்னல்கள் தந்தும்கூட கூட்டம் சிறப்புற நடைபெற்றது என்பது குறிப்பிடத் தக்கது.

பூலாமேடு தி. மு. கழகம்

1—5—56-ல், கழக உறுப்பினர் கூட்டம் தோழர் சுப்பிரமணி தலைமையில் நடைபெற்றபோது, கழகத்திற்குத் தனிக் கட்டிடம் அமைக்க முடிவுசெய்து, அதற்குத் தேவையான நிதி சேர்க்கும் பொறுப்பை தோழர்கள் ஆ. நல்லசாமி, சுப்பிரமணியம், நாராயணசாமி ஆகியோரிடம் ஒப்படைக்கப் பட்டதுடன், கட்டிடம் அமைக்கும் பொறுப்பை தோழர் வை. இராசேந்திரன்வசம் தரப்பட்டது கட்டிட அமைப்புக்குத் தேவையான இடத்தை இலவசமாகத் தர முன்வந்த தோழர் நல்லசாமி அவர்கட்கு நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

சேலம்நகர் குதிரை வண்டி தொழிலாளர்கள் சங்கம்

27-4-56 இரவு 7 மணிக்கு சின்னக் கடைவீதி புல்லுக்கடை மைதானத்தில், மேற்படி சங்க அமைப்புக்கூட்டம் தோழர் ஷேக—பீரான் சாயபு தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் சிற்றுளி-எ. சுப்பிரமணியம் தலைவராகவும், சர்பத் (எ) பக்தவத்சலம் செயலாளராகவும், எ. துரைசாமி துணைச் செயலாளராகவும், ஷேக்-பீரான் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டதுடன், எழு செயற் குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மேகலை மன்றம் திறப்பு

25-4-56 இரவு 9 மணிக்கு திருச்சி, மதுரைரோடு, வள்ளுவர் வீதி மேகலை மன்றத் திறப்புவிழா, தோழர் ஐ. எம். ஷரீப் தலைமையில் நடைபெற்றது. தோழர் எம். பாவுதீன் முன்னிலையில், தோழர்கள் ரத்தினம், பிச்சை, காஜா, ஜோசப் பேசினர். தோழர்கள் சொக்கலிங்கம், காஜா இன்னிசை வழங்கினர். மன்றச் செயலாளராக டி. அமீர்; துணைச் செயலாளராக எஸ். முருகேசன், பொருளாளராக ஜி. குலாம் ரசூல் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அண்ணா கலைக் குழு

25-4-56 இரவு 7 மணிக்கு திருப்பத்தூர் (வ. ஆ) நாய்க்கனூர கிராமத்தில் திரு. இரத்தினவேலன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் அண்ணா கலைக் குழு நிறுவப்பட்டு, தோழர்கள் எம். கே. எஸ் மணி தலைவராகவும், டி. சுப்பிரமணி செயலாளராகவும், ஆர். சீனிவாசன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன். 5 உறுப்பினர்கள் கொண்ட செயற் குழு ஒன்றும் நிறுவப்பட்டது.

பாசன வேலைகளுக்காக மின்சார சக்தி உபயோகித்தவர்களின் எண்ணிக்கை 1950-ல் 19,816 ஆக இருந்தது—1954-ல் 86,012 ஆக அதிகரித்தது.

நாட்டரசன்கோட்டை[illegible] தி. மு. கழகத் துவ[illegible]

29-4-56 மாலை, பி. [illegible] ஞானம் அவர்களால் இங்கு [illegible] கழகம் துவக்கிவைக்கப்பெற்[illegible] தோழர்கள் நா. சே. நாராய[illegible] கண. சுப. நாராயணன், சுப[illegible] பதி ஆகியோர் முறையே செய[illegible] ளாளர், துணைச் செயலா[illegible] பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதுடன் 11 பேர் கொண்ட செயற்குழுவும் நிறுவப்பட்டது.

சென்னை 11-வது வட்ட தி. மு. கழகம்

1-5-56 காலை 10 மணியளவில் கழகப் பணிமனையில் தோழர் என். இராமதாஸ் தலைமையில் 'மே தின விழா' நடைபெற்றது. தோழர்கள் மா. லோ. இளவழகன், தெ. கணேசன், அ. தமிழ்ச் செல்வன், கா. வி. இராதாகிருட்டிணன், இளந்தென்றல் ஆகியோர் பேசினர். கூட்ட இறுதியில் எல்லாத் தோழர்களுக்குப், பள்ளி சிறார்களுக்கும் இனிப்புகள் வழங்கப் பட்டது.

சாத்தான்குளம் தி. மு. க.

1—5—56 இரவு 7½ மணிக்கு, பெரியார் சதுக்கத்தில், நகர தி. மு. கழகச் சார்பில், தோழர் இரா. நல்லினைவேல் தலைமையில், மே தின விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். என் ராஜா, சே. அ. சைலாத் ஆகியோர் மே தினம் பற்றிப் பேசிய பின், தோழர் கே. சேர்மத்துரை மே தின வரலாறு குறித்தும், திராவிடரின் உரிமை, தி. மு. கழக மாநில மாநாடு ஆகியவை பற்றியும் விரிவுரையாற்றினார்.

மேலப்பாளையம் தி. மு. கழகம்

28-4-56-ல், தோழர் தெ. க. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், 15-5-56-க்குள் கூடுதலான உறுப்பினர்கள் சேர்ப்பதென்று முடிவு செய்யப்பட்டதுடன், கைத்தறி நெசவாளர்களுக்குப் 'போனஸ்' வழங்குமாறு 'மாஸ்டர் வீவர்'களைக் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தேவபாண்டலத்தில் தி.மு. கழகப் பொதுக்கூட்டம்

23—4—56 மாலை 6 மணிக்கு, இவ்வூர் கழகச் சார்பில், தோழர் ஏ. ஆர். சுந்தரம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் தில்லை-வில்லாளன், பொன்-சொக்கலிங்கம், மு. பாண்டியன், அம்பாயிரம், காசியப்பன், கேசவன் ஆகியோர் பேசினர்.

செண்டங்காடு தி. மு. க.

29—4—56 இரவு 8 மணிக்கு, தோழர் அ. கனகசபை தலைமையில், கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெற்றபோது, மாநில மாநாடு குறித்து இந்த வட்டாரங்களில் நல்ல முறையில் விளம்பரம் செய்யவேண்டுமென முடிவு செய்யப்பட்டு அதற்கென ஒரு விளம்பரக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

குணியமுத்தூர் தி. மு. க.

22—4—56 மாலை 6 மணியளவில், கழகப் பொதுக்கூட்டம் தோழர் க. இராமு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கெ. டி. தண்டபாணி, சே. அ. இராசமாணிக்கம், தங்கமாணிக்கம், சிற்றுளி-சுப்பிரமணியம் ஆகியோர் திருச்சி மாநில மாநாடு பற்றியும், கழக இலட்சியம் குறித்தும் விளக்கவுரையாற்றினர்.

திபெத்தில் 'புரட்சி'

'செஞ்சீன ஆதிக்க'த்திற்கு எதிராகக் கிளர்ச்சி!

900 சீனத் துருப்புகள் படுகொலை?

காட்மண்டு மே 7—

திபெத் நாட்டில், செஞ்சீன ஆதிக்கம் செலுத்துவதாயும், செஞ்சீன ஆதிக்கப் பிடி அகன்று திபெத் சுதந்திர நாடாக விளங்கவேண்டும் என்று கோரியும், அவ்வப்போது நடைபெறும் சிறு சிறு கிளர்ச்சிகள் இப்போது பேருருக் கொள்வதாகக் கூறப்படுகிறது.

திபெத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ள கோலாக் மாவட்டத்தில் சீன ஆதிக்கத்திற்கு எதிராகப் புரட்சி தோன்றியிருப்பதாகவும், இரண்டு நாட்களுக்கு முன் சுமார் 900 செஞ்சீனத் துருப்புக்கள் படுகொலை செய்யப்பட்டதாகவும் செய்திகள் தரப்படுகின்றன.

நேபாள மன்னரின் முடிசூட்டு விழாவிற்கு வந்திருந்த வெளிநாட்டு பத்திரிகையாளர்களும்கூட இந்தத் தகவல்களை உலகெங்கும் அனுப்பியிருப்பதாயும் கூறப்படுகிறது.

என்றாலும், இவை சீனர் கட்டிவிட்ட கதை என்று மறுக்கப்படுவதாயும் தெரியவருகிறது.

இந்தப் 'புரட்சி' பற்றி கூறப்படுவதாவது :—

'மிமாங்' என்ற திபெத்தின் பழங்குடி மக்களுள் ஒரு பிரிவினர், இரண்டு திங்களுக்கு முன்பே, செஞ்சீன இராணுவம் திபெத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று சுவரொட்டிகள் ஒட்டி கிளர்ச்சி செய்தனர். அதற்காகப் பலர் கைதாயினர். அதைத் தொடர்ந்து, 'சீன ஆதிக்க'த்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்து வருகின்றனர்.

அதை ஒட்டி சில தினங்களுக்கு முன்பு, சீன இராணுவப் பாடி வீடு ஒன்றை, இந்த 'மிமாங்' மக்கள் தாக்கி அங்கிருந்த 900 சீன இராணுவ வீரர்களையும் படுகொலை செய்து விட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு ஜெனரல் மா-பா-பாக் என்ற கோலக் தலைவர் தலைமை தாங்கினராம்.

பின்னர், சீன இராணுவத் தலைமையினர் செய்தி கேட்டு, ஏராளமான துருப்புகளை அனுப்பிவைத்தனராம். அதைக் கண்டதும், தாக்குதல் நடத்திய மிமாங் மக்கள் ஓடி ஒளிந்துவிட்டனராம்.

மிமாங் மக்களின் தூதுக் குழு ஒன்று தலாய்லாமாவைச் சந்தித்து, சீனத் துருப்புகள் திபெத்திலிருந்து திரும்பப் பெறப்படவேண்டும் என்றும், சீனர்களே திபெத்தை ஆளுபவர்களாக இருக்கக்கூடாது என்றும், இந்த விவகாரத்தில் சீனக் குடியரசுத் தலைவரான மா-சே-துங்கைத் தலையிட்டு நியாயம் வழங்குமாறு தலாய்லாமா கோரவேண்டும் என்றும் எடுத்துரைத்திருக்கின்றனராம்.

இன்னும் செஞ்சீன விமானங்கள் லாஷா பகுதியிலும், தாக்குதலுக்கு ஆளான கோலக் பகுதியிலும் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றனவாம்.

மாநில மாநாட்டை நினைவுபடுத்தி சைக்கிள் ஊர்வலம்

"13-5-56 ஞாயிறு காலை 8 மணிக்கு திருச்சி டவுன்ஹால் மைதானத்திலிருந்து தோழர் ஐ. எம். ஷரீப் தலைமையில், மாநில மாநாட்டு விளம்பர சைகிள் ஊர்வலம் நடைபெறும்.

"ஊர்வலம் திருச்சி நகர் முழுவதும் சுற்றி மாநாடு சம்பந்தமாகப் பிரச்சாரம் செய்யும்.

"கழகத் தோழர்களும், மாணவர்களும் ஊர்வலத்தில் பங்கு பெற்று சிறப்பிக்கவேண்டுகிறேன்."

என்று, மாநில மாநாட்டுச் செயலாளர் எம். எஸ். மணி அறிவிக்கிறார்.

7,240 தின இதழ்கள்— 4,80,00,000 பிரதிகள்!

மாஸ்கோ. மே 5—

சோவியத் யூனியனிலுள்ள 7,240 தின இதழ்கள் மொத்தம் 4 கோடி 80 இலட்சம் பிரதிகள் விற்பதாகவும், 'பிராவ்தா' என்ற இதழ் மட்டும் 27 இலட்சம் பிரதிகள் விற்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பஜகோவிந்தம்' பாடுவோருக்கு...!

டார்—எஸ்—சல்லாம், மே 6—

மேகக் கூட்டத்தில் 'ராக்கெட்' குண்டுகள் மூலம் சாதாரண உப்பைத் தூவி, மத்திய தங்கனீகாவில் செயற்கை முறையில் மழை பெய்விக்கப்பட்டதாம். அவ்விடத்தில் சாதாரண அளவைவிட இவ்வாண்டு குறைவாக மழை பெய்ததாம். அணைக்கட்டில் தண்ணீர் குறைந்து விட்டதினால் இச் சோதனை நடைபெற்றதாம்.

'ராக்கெட்' குண்டுகள் சுடப்பட்ட தினங்களிலெல்லாம் மழை பெய்து, அணைக்கட்டில் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளதாம்.

ஆலைத் தொழிலாளரின் வேலை நேரம்

வாரத்தில் 44 மணி நேரமாகக் குறைப்பதற்கு மசோதா

ஆலைத் தொழிலாளரின் வேலை நேரத்தை வாரத்தில் 44 மணி நேரமாகக் குறைக்கக்கோரும் தனி உறுப்பினர் மசோதா ஒன்று மக்கள் சபையில் பிரரேபிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது தொழிலாளரின் வேலை நேரம் வாரத்தில் 48 மணியாகும்.

சென்னையின் மின்சாரத் திட்டங்கள்

டில்லி கருத்து

சேலம், மே 4—

'சென்னை மாநிலத்தின் மின்சாரத் தேவைக்கு பல முக்கியத் திட்டங்கள் விரிவாக பரிசீலனை செய்யப்படவிருப்பதால், ஒகேனேகல் நீர்விசைத் திட்டத்தைப் பற்றி விரிவான பரிசீலனை செய்யவேண்டியது முக்கியமானதல்ல,' என்று இந்தியப் பேரரசினர் எண்ணுவதாகத் தெரியவருகிறது.

இந்தத் திட்டப்படி, ஒகேனேகல் நீர்வீழ்ச்சிக்கு மேல்புறம் சுமார் 6 மைல் தொலைவில் காவிரியின் குறுக்கே 150 அடி உயரம் அணை போடுவதாக இருந்தது. 2-வது திட்டத்தில் புது திட்டங்கள் குறித்து பரிசீலனைகள் செய்வதற்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ 24 இலட்சத்தில் இத்திட்டத்திற்கு தற்போது மூன்றாவது இடமளிக்கப்பட்டுள்ளதெனத் தெரிகிறது.

கூட்டுறவு முறையில் குடிசைத் தொழிலாகச் செய்யப்படும் தீக்குச்சிகளுக்கு விதிக்கப்பட்டு வரும் மிகு வரியிலிருந்து 'குரோஸ்' ஒன்றுக்கு 9 அணா வீதம் கழிவு தர இந்திய அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

இளந்தம்பதிகள் சாகசம்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

படகு ஒன்றினுலேயே கடந்து இந்தியா வந்திருக்கின்றனர், அந்த ஜோடிகள்!

இந்த அரும் செயல்வீரர்களான கிரான்ஸ் தம்பதிகள், மத்திய தரைக் கடலைக் கடந்துள்ளனர். அதுவுமன்றி, சிந்து, கங்கை போன்ற நதிகளையும் அலுமினியப் படகினுலேயே கடந்து வந்திருக்கின்றனர்.

11 அடி நீளம், 4 அடி அகலம், ஒரு அடி உயரம் உடைய இந்தப் படகு, 17 அடி உயரமான பாய்மரமும் உடையதாம்.

'எல்லைகளை மீண்டும......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளை மாத்திரம் பார்வையிட உத்தேசித்திருப்பதாகவும், இன்று கூட ஆரியங்காவு சமீபம் சுமார் 3.200 அடி உயரமுள்ள மலையுச்சியில் புறப்படுகிற தண்ணீர் கிழக்கு நோக்கிப் புறப்பட்டும், அந்நதி பாயும் பகுதிகளை அமையப்போகும் புதிய கேரள மாநிலத்தில் உட்படுத்தியிருப்பது முறையல்ல என்பதைக் கருதிதான் நேரில் பார்வையிட்டதாகவும், பார்வையிட்டதில் தொட்டுக் கிடக்கும் கீழ்ப் பாக மலையினடி வாரத்தின் வழியாக ஆற்று நீர் மேற்கேயே செல்வதாக தெரிந்ததன் மூலம் பிரஸ்தாப மலையை 'பிளானி'ல் குறிப்பிடாதது தவறென்றும், அதனுல் கிளம்பிய சந்தேகம், நிவர்த்தி செய்யப்பட்டதென்றும் கூறினராம்.

எதுவாக இருப்பினும், 'சர்வே செய்யப்பட்ட பகுதிகளனைத்தையும் மீண்டுமொருமுறை புனர் பரிசீலனை செய்வது நலமென தான் கூறியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மாநில மாநாட்டில்!

★

சிறப்புத் தலைப்புகள் மீதும், தீர்மானங்கள் மீதும்

பேசுவோர்:

★

அண்ணா

என். வி. நடராசன்	ஈ. வெ. கி. சம்பத்	மு. கருணாநிதி
கே. ஏ. மதியழகன்	க. அன்பழகன்	கண்ணதாசன்
சி. பி. சிற்றரசு	டி. கே. சீனிவாசன்	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
என். எஸ். இளங்கோ	கி. மனோகரன்	காஞ்சி—கல்யாணசுந்தரம்
சத்தியவாணிமுத்து	தில்லை-வில்லாளன்	கா. அப்பாதுரையார்
ப. உ. சண்முகம்	எம். எஸ். இராமசாமி	அரங்கண்ணல்
அருண்மொழி	ஏ. கோவிந்தசாமி	அ. பொன்னம்பலனர்
இரா. சு. தங்கப்பழம்	எம். பி. சுப்பிரமணியம்	ஆர். எஸ். பாண்டியன்
கே. கே. நீலமேகம்	கே. வி. கே. சாமி	அலமேலு அப்பாதுரை
பி. ஆர். கோகுலகிருஷ்ணன்	டி. கே. பொன்னுவேலு	அலிசேக்மன்சூர்
பூங்கோதை	பொற்செல்வி	ப. கண்ணன்
மணிமொழியார்	எஸ். அப்பாவு	கோவை-செழியன்
வாணிதாசன்	சுரதா	எம். எஸ். சிவசாமி
க. அறிவழகன்	எஸ். எஸ். தென்னரசு	மாறன்
சுழுத்தடிகள்	வி. ஜி. இராசையா	இளமுருகு
டி. வி. நாராயணசாமி	வி. எஸ். கோவிந்தராசன்	பெருமாள்
கே. கோவிந்தசாமி	சி. டி. தண்டபாணி	கே. ஏ. கிருஷ்ணசாமி
ஜி. பராங்குசம்	ஏ. கே. வில்வம்	ஈ. ஆர். கிருஷ்ணன்
எஸ். வி. லிங்கம்	ஜேபக்கனி	சி. வி. இராசகோபால்
பி. என். இராமானுசம்	டி. சண்முகம்	தமிழரசு
க. நெடுஞ்சேரழன்	எஸ். வேதரத்தினம்	சிற்றுளி-சுப்பிரமணியம்
சி. வி. எம். அண்ணாமலை	ஏ. எல். சி. கிருஷ்ணசாமி	போளூர்-சுப்பிரமணியம்
முல்லை சத்தி	இளம்பரிதி	கே. எம். கண்ணபிரான்
ஆர். பாலகுருசாமி	வி. முனுசாமி	ஏ. கே. சாமி
வி. சிவப்பிரகாசம்	குடவாசல் கிருஷ்ணமூர்த்தி	ச. சிவப்பிரகாசம்
இரா. சாம்பசிவம்	பொன். சொக்கலிங்கம்	எஸ். ஏ. ராசமாணிக்கம்
இ.ல.மா. சவுந்திரபாண்டியன்	கே. எஸ். சந்தானம்	வி. சண்முகநாதன்
வி. எம். ஜான்	டி. பி. அழகமுத்து	பெங்களூர் எஸ். வி. பதி
கே. டி. எஸ். மணி	வி. சின்னத்தம்பி	ப. நாராயணன்
கருத்தோவியன்	சி. முனுசாமி	குளித்தலை முத்துகிருஷ்ணன்
தா. ஆவுடையப்பன்	ப. இராமலிங்கம்	தூத்துக்குடி நடராசன்
சி. ஆர். பாலசுந்தரம்	தாண்டவன்	குப்புசாமி
இலங்கை அதிமணி	பம்பாய் தியாகராசன்	டி. எம். பார்த்தசாரதி
சா. ஆமீது	உ. பில்லப்பன்	பு. இராமசாமி
சமதர்மம்	மா. தங்கவேலர்	சாமி பழனியப்பன்
இராம. சுப்பையா	டபிள்யூ. கே. துரைசாமி	சித்தூர் பார்த்தசாரதி
முல்லை வடிவேலு	எஸ். கந்தசாமி	திருப்பத்தூர் நடேசன்
வி. டி. அண்ணாமலை	வகாப்	நாகசுந்தரம்
டாக்டர் அருணாசலம்	ஏர்வாடி அப்துல்காதர்	கோடீஸ்வரராவ்
என்னரியப்பெருமாள்	எஸ். எஸ். பி. லிங்கம்	மேத்தா
சிவசண்முகசுந்தரம்	என். கிட்டப்பா	அடைக்கலம்
து. உ. இராமநாதன்	குன்றத்தூர் சம்பந்தம்	டி. ஆர். சுப்பிரமணியம்
ஒளியழகன்	கலையழகன்	சிறுமி பானுமதி

இந்தியாவில் இணைக்கும் நடுத்தர மோட்டார்கள்

சரிவர வேலை செய்யவில்லை எனப் புகார்

புதுடில்லி, மே 5—

"பம்பாய், சென்னை, மேற்கு வங்காளத்தில் 3 'கம்பெனி'கள் தற்போது மோட்டார் வண்டிகளை தயாரித்து வருகின்றன; இவை மூன்றும் ஆண்டொன்றுக்கு 33,000 வண்டிகளை தயாரிக்கும் ஆற்றல் தமக்குள்ளதாகக் கூறுகின்றன,"

என்று, மாநிலங்கள் சபையில் உற்பத்தி அமைச்சர் தெரிவித்தார்.

கே :- 'இந்தியாவில் இணைக்கப்படும் நடுத்தர மோட்டார்களும், இந்தியாவிலேயே சிறிது தயாரிக்கப்படும் நடுத்தர மோட்டார்களும் சரிவர இயங்கவில்லை என்பது உண்மையா ?'

டி. டி. கே :- 'இப்படிக் கூறுவதை நான் மறுக்கிறேன். சில மோட்டார்கள் குறித்துச் சிலர் புகார் செய்திருக்கலாம்; இந்தப் புகார்களையெல்லாம் கவனிக்க அரசினர் ஆவன செய்திருக்கின்றனர்.'

பெரிய துறைமுகங்களின் அபிவிருத்திக்காக ரூ 62 28 00.000 செலவாகக்கூடிய வேலைத் திட்டமொன்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கிறது.

அனுதாபம்

சென்னை எழுகிணறு 9-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர் திரு. பக்தவச்சலனர் தமது 55-ம் வயதில், தியாகராயபிள்ளை தெரு, 3-ம் எண்ணுள்ள தமது இல்லத்தில் இயற்கை எய்தினர். அவருடைய குடும்பத்தினருக்கு 9-வது வட்ட தி. மு. கழகம் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்ளுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.